3.3.2026

<u>அ.வ.எண்.12/2008</u>

வா.சா.1 சுந்தரம் த/பெ. குள்ளுபடையாச்சி

3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

பாக பிரிவினை கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் 8ல் 3பங்கு கேட்கிறேன். தாவாவில் நான்கு அயிட்ட சொத்துக்கள் உள்ளது. தாவா முதல் அயிட்ட சொத்து சந்திரசேகரபுரம் அக்ரஉறாரத்தில் ச.எண்.543ல் அமைந்துள்ளது. அதன்பரப்பு 2 ஏக்கர் 40 செண்ட் ஆகும்.

இரண்டாம் அயிட்ட சொத்து சந்திரசேகரபுரம் கிராமத்தில் ச.எண்.422/2பி ல் அமைந்துள்ளது. அதன் பரப்பளவு 1ஏக்கர் 30 செண்ட் ஆகும். மூன்றாம் அயிட்ட சொத்து கள்ளகுறிச்சி தாலூக்கா எடுத்த வாய்நத்தம் கிராமத்தில் அமைந்துள்ளது. அதன் அனைத்து சர்வே எண்களும் எனக்கு தெரியாது. விஸ்தீரணம் 7ஏக்கர் 30 செண்ட் ஆகும். நான்காவது அயிட்ட சொத்து யூகோ வங்கியில் வைப்பீடு செய்யப்பட்டுள்ள பணம் ஆகும்.

முதல் அயிட்ட சொத்தின் ஒரு பகுதியில் அரசாங்கம் நில ஆர்ஜிதம் செய்துள்ளது. அதன் பரப்பளவு எவ்வளவு என்று எனக்கு தெரியாது. அந்த ஆர்ஜிதம் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்னர் செய்யப்பட்டுள்ளது. நில ஆர்ஜிதம் செய்தது போக மீதியுள்ள நிலத்தை காட்ட பிராதை திருத்தம் செய்யவில்லை.

தாவா முதல் அயிட்ட சொத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே 76 செண்ட் நிலத்தினை விற்பனை செய்துள்ளார்கள் என்றால் சரிதான். தாவா முதல் அயிட்ட சொத்தில் நான் சொல்லும் விஸ்தீரணம் தற்போது இல்லை என்றால் சரிதான். அதேபோல் பாதைக்காக சந்திரசேகரபுரம் பஞ்சாயத்திற்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் பரப்பளவு எனக்கு தெரியாது. அந்த இடத்தில் பாதை அமைத்து பொதுமக்கள் பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் இல்லை. அந்த பாதையை உட்படுத்தி தான் வழக்கு முதல் அயிட்ட சொத்து காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

ஆதியில் தாவா முதல் அயிட்ட சொத்து நடுப்பையன் (என்கிற) ஆறுமுக படையாச்சி பெயரில் கிரையம் ஏற்பட்டுள்ளது. நடுப்பையன் பெயரில் ஏற்பட்ட கிரையத்தின் அடிப்படையில் தான் நான் இந்த பாக வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேலும் வருவாய்துறை ஆவணங்களின் அடிப்படையில் உரிமை கோருகிறேன். இதை தவிர வேறு ஆவணங்களின் மூலம் நான் பாகபிரிவினை கோரவில்லை என்றால் சரிதான். வேறு ஆவணங்களின் அடிப்படையில் நான் பங்கு கேட்கவில்லை. நான் என்ன ஆவணங்கள் கொடுத்துள்ளேன் என்று எனக்கு தெரியும்.

இந்த வழக்கை 2, 3 முதல் 6 மற்றும் 12 பிரதிவாதிகள் எதிர்த்து வருகிறார்கள். 3 முதல் 6 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரைக்கு மறுப்புரை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 ஆவணம் எனது முப்பாட்டன் பெயரில் ஏற்பட்ட பாக பிரிவினை பத்திரம் ஆகும். அந்த பத்திரம் குள்ளுபடையாச்சி மற்றும் அவரது வகையராக்களுக்கு இடையே ஏற்பட்ட பாக பிரிவினை பத்திரம் ஆகும். அந்த பத்திரத்தில் 8 நபர்கள் தரப்பினர்களாக உள்ளார்கள். எனது பாட்டனார் குள்ளு படையாச்சிக்கு டி செட்டியூல் பாகம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எனது தந்தையின் பாட்டனாருடன் உடன் பிறந்தவர்கள் முத்துசாமி படையாச்சி, சின்னதம்பி படையாச்சி, அழக படையாச்சி, ஆறுமுக படையாச்சி மற்றும் சேவான் படையாச்சி ஆவார்கள். மேற்சொன்ன நபர்கள் மற்றும் சின்னதம்பி படையாச்சி வாரிசுகள் அந்த பாக பிரிவினையை செய்து கொண்டுள்ளார்கள். வா.சா.ஆ.1 ஆவணத்தில் பிதுரார்ஜிதமாக பாத்தியப்பட்ட சொத்து என்று எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பொதுவாக பாத்தியப்பட்ட சொத்துக்களை பாக பிரிவினை செய்து கொள்வதாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 முதல் 7 வரையுள்ள ஆவணங்கள் ஆறுமுக படையாச்சி என்பவருக்கு ஏற்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். அந்த ஆறுமுக படையாச்சி யார் என்று எனக்கு தெரியாது என்றால் எனக்கு தெரியும் அவர் எனது தந்தையின் பாட்டனார் ஆவார்.

வா.சா.ஆ.2 முதல் 7வரையுள்ள ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஆறுமுக படையாச்சி என்பவர் எனது தாத்தாவின் சகோதரர் அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 முதல் 16 மற்றும் வா.சா.ஆ.47 கண்டுள்ள நடுப்பையன் (எ) ஆறுமுக படையாச்சி பெயரில் ஏற்பட்டுள்ள கிரைய பத்திரங்கள் என்றால் சரிதான்.

தாவா முதல் அயிட்ட சொத்தை நடுப்பையன் (எ) ஆறுமுக படையாச்சி எப்போது கிரையம் வாங்கினார் என்றால் 1945ம் ஆண்டு வா.சா.ஆ.13 மூலம் கிரையம் பெற்றுள்ளார். வா.சா.ஆ.13 ஆவணத்தில் கண்டுள்ள சொத்தை தவிர நடுப்பையன் (எ) ஆறுமுக படையாச்சி பெயரில் உள்ள அனைத்து சொத்துக்களையும் வழக்கில் காட்டியுள்ளேனா என்றால் எங்கள் குடும்பத்திற்கு என்ன சொத்தை பிரித்துக்கொடுத்தாரோ அந்த சொத்தை மட்டும் காட்டியுள்ளேன். எப்போது எந்த ஆவணத்தின் அடிப்படையில் பிரித்து கொடுத்தார் என்றால் வாய்மொழியாக தான் கொடுத்துள்ளார் எதற்கும் ஆவணம் கிடையாது.

நான் பிறந்த வருடம் 1954 ஆகும். எந்த வருடம் யார் முன்னிலையில் பிரித்து கொடுத்தார் என்று நேரடியாக தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது எனது அப்பா சொல்லி தெரியும். எந்த வருடம் பிரித்து கொடுத்தார் என்று எனது தந்தை சொன்னார் என்றால் 1955ம் ஆண்டு பிரித்து கொடுத்ததாக சொன்னார். எனது தந்தை தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை. தாவா முதல் அயிட்ட சொத்து பாக பிரிவினையில் நடுப்பையன் (எ) ஆறுமுக படையாச்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதா என்றால் இல்லை.

தாவா முதல் அயிட்ட சொத்து எனது தந்தைக்கு பாக பிரிவினையில் ஒதுக்கீடு செய்யப்பட்டது என்று பிராதிலும், எனது பிரமாண வாக்கு மூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் தாவாவில் சொல்லவில்லை, பிரமாண வாக்கு மூலத்தில் சொல்லியுள்ளேன். நடுப்பையன் (எ) ஆறுமுக படையாச்சி வா.சா.ஆ.13 ன்படி கிரையம் பெற்ற சொத்தை அவர் அனுபவம் செய்து வந்து 12.12.1994 தேதியில் வா.சா.ஆ.21ன் படி 3ம் பிரதிவாதியின் கணவர் முத்துசாமிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் இல்லை.

வா.சா.ஆ.21 ஆவணத்தை நான் படித்து பார்த்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். அந்த ஆவணத்தில் சொல்லியுள்ள வாசனகங்கள் உண்மையானதா என்றால் தவறு. அந்த ஆவணத்தில் சொல்லியுள்ள விவரங்கள் தவறு என்று பிராதிலும், பிரமாண வாக்கு மூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் பிரமாண வாக்கு மூலத்தில் சொல்லியுள்ளேன். நான் தவறாக சொல்கிறேன் என்றும், பிரமாண வாக்கு மூலத்தில் அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.21 ஆவணத்தில் அதை ஏற்படுத்தி கொடுத்த நடுப்பையன் (எ) ஆறுமுக படையாச்சி சொத்தை தன்னுடைய செலவிற்காகவும் மற்றும் கடன்களை தீர்ப்பதற்காகவும், தனது ஜீவனத்திற்காகவும ் விற்பனை செய்வதாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது ஆனால் அது தவறு. சொத்து எனது தகப்பனாருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு அந்த சொத்து அவருடைய உடமையில் இருந்திருந்தால் 1994ம் ஆண்டே அந்த சொத்து பொறுத்து வா.சா.ஆ.21 ஆவணம் ஏற்படுத்தியிருக்க முடியாது என்றால் சரியல்ல.

நடுப்பையன் (எ) ஆறுமுகத்திற்கு எத்தனை வாரிசுகள் என்றால் அவருக்கு இரண்டு மனைவிகள் மற்றும் 3 வாரிசுகள் உள்ளார்கள். நடுப்பையன் (எ) ஆறுமுக படையாச்சியை அவரது மகன் ராமசாமி தான் அவர் இறக்கும்வரை அவரை கவனித்து கொண்டார். அவர் உயில் யாருக்கு எழுதி வைத்தார் என்றால் எனது சித்தப்பா மகன் மணிக்கு உயில் எழுதி வைத்தார். அந்த உயிலை நான் படித்து பார்த்துள்ளேன். அந்த உயில் ஆவணத்தில் சம்மந்தப்பட்ட சொத்து அவருக்கு எப்படி கிடைத்தது என்ற சொல்லியுள்ளாரா என்றால் சொல்லியுள்ளார்.

வா.சா.ஆ.1 பாக பிரிவினை பத்திரத்தில் கிடைத்த சொத்தையும், வா.சா.ஆ.15ல் கிடைத்த சொத்தையும் அவர் உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த உயிலில் தனக்கு சுயார்ஜிதமாக பாத்தியப்பட்ட சொத்தை உயில் எழுதி வைத்ததாக சொல்லியுள்ளார் என்றால் அந்த வரி தவறு.

கள்ளக்குறிச்சி வட்டத்தில் அமைந்துள்ள சொத்துக்கள் 3ம் பிரதிவாதியின் கணவர் முத்துசாமி மற்றும் 2ம் பிரதிவாதியும் சேர்ந்து வா.சா.ஆ.20ன் படி சுயமாக சம்பாதித்த சொத்துக்கள் என்றால் சரியல்ல. முத்துசாமி ஆயில் இஞ்சின் மற்றும் மின்மோட்டார் பழுது பார்க்கும் வேலை செய்து வந்தர் என்றால் இல்லை. அவர் அந்த தொழில் செய்து கிடைத்த வருமானத்தின் மூலமும் மற்றும் தனது மனைவியின் நகைகளை விற்றும் வா.சா.ஆ.20 மற்றும் வா.சா.ஆ.21 ஆவணங்களில் கண்ட சொத்துக்களை கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல.

அவ்வாறு கிடைத்த வருமானத்தின் மூலம் சேமித்த தொகையை தான் வங்கியில் அவர் பெயரில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா முதல் அயிட்ட சொத்து பாக பிரிவினைக்கு உகந்தது அல்ல என்றும், தாவா 3ம் அயிட்ட சொத்தில் 3 முதல் 6ம் பிரதிவாதிகளுக்கு பேர்பாதி பங்கு உரிமை ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

தாவா1 ம் அயிட்ட சொத்துக்களை பொறுத்து எனது செல்வாக்கை பயன்படுத்தி பட்டா பெற்றுக் கொண்டேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.40 முதல் 44 வரையுள்ள ஆவணங்கள் எதற்காக வாங்கப்பட்டது என்றால் கூட்டுறவு வங்கியில் கடன் வாங்குவதற்காக வாங்கப்பட்டது. அந்த ஆவணங்களில் வழக்கு சொத்தை தவிர வேறு ஒரு சொத்தும் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். கடன் தொகை அதிகம் பெறவேண்டும் என்பதற்காக 3ம் பிரதிவாதியின் கணவருக்கு பாத்தியப்பட்ட சொத்தையும் சேர்த்து அந்த ஆவணங்கள் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. அந்த ஆவணங்களில் சந்திரசேகரபுரம் கூட்டுறவு வங்கியில் கடன் வாங்குவதற்காக வழங்கப்படுகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வருவாய் ஆவணங்களின்

அடிப்படையில் வழக்கு சொத்துக்கள் எனது சுவாதீனத்தில் உள்ளது என்ற நான் சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல.

3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய கால அவகாசம் கோரியதால் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்பட்டது.

Sd/- K. Sundaram

Taken down before/by me in/ open court and read over/ interpreted/
to the witness and acknowledge/ by him/ her to be correct.

Sd/- xxxxxxxxxx.
Sub Judge, Rasipuram.